அந்த வகையிலே ஒதுக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்திக் கொண்டு வந்தோம். ஆனால் அதை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. மீண்டும் வற்புறுத்திக்கொண்டு வருகின்றோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழகத்திற்கு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருப்தி தெரிவித்திருக்கிறார்கள் என்பது உண்மை தானா? தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ததைப் பொறுத்த வரையில் மத்திய அரசு எந்தவிதமான பாரபட்சமும் காட்டவில்லை என்பதை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசின் திட்டக்குழுவும் நாமும் சேர்ந்து பேசி இறுதியிலே ஒரு நிலைமைக்கு வந்தது என்பதுதான் இந்த 3,150 கோடி ரூபாயாகும். ஆனால் நாம் எவ்வளவு கேட்டோம் என்பதையும், அவர்கள் எவ்வளவு கொடுக்க முன்வந்தார்கள் என்பதையும் பார்க்கும்போது இது ஒரு இடைநிலையாக முடிவு செய்யப்பட்ட ஒன்றுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இதிலே முழு திருப்தியும் அடைந்துவிட்டோமா என்றால் முழு திருப்தியும் அடைந்துவிடவில்லை. திருப்தி அடைந்திருக்கிறோம். ஒரு கட்டத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறோம், ஆகவே திருப்தி பெறுகிறோமா இல்லையா என்பதை நடைமுறையில்தான் பார்க்க வேண்டுமே தவிர அதை இப்போதே சொல்லவேண்டியதில்லை.

Huts of Adidravidars in Azhingimangalam Village.

Q. No. 833—Thiru L. ELAYAPERUMAL: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether the huts of Adidravidars were demolished at Azhingimangalam Village, Kattumannarkoil Taluk in South Arcot district by the Deputy Superintendent of Police, Chidambaram even after prior intimation has been given by the Revenue Officials:

(b) whether any representations have been received from the people of that village and

(c) the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ), (ஆ) மற்றும் (இ) தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோவில் வட்டம், அழிஞ்சிமங்கலம் கிராமத்தில் கிராம மக்கள் அறுவடை சமயங்களில் களமாகப் பயன்படுத்தி வந்த புறம்போக்கு நிலத்தில், 7–1–81 அன்று இரவு சில ஆதி

திராவிடர்கள் தற்காலிகக் குடிசைகள் எழுப்பி இருக்கின்றனர். கிராம மக்கள் ஆதிதிராவிடர்களால் போடப்பட்ட குடிசைகளை அப்புறப்படுத்துமாறும், மேற்கொண்டு குடிசைகள் போடாமல் தடுக்குமாறும், காட்டு மன்னார் கோவில் வட்டாட்சியரிடமும், காவல் துறை ஆய்வாளரிடமும் முறையிட்டுள்ளனர். ஆதிதிராவிடர்களும் தங்களுக்கு வீட்டு மனைகளுக்கான பட்டா வழங்குமாறு மனுச் செய்துள்ளனர். 9–1–81 அன்று வட்டாட்சியரும் காவல் துறை ஆய்வாளரும் இடத்தைப் பார்வையிட்டு அறுவடை வேலைகளுக்கு உடனடியாக களம் தேவைப்படுவதால், குடிசைகளை உடனடியாக அப்புறப்படுத்துமாறு ஆதிதிராவிடர்களைக் கேட்டுக் கொண்டனர். வன்முறையில் ஈடுபட வேண்டாம் என்று சாதி இந்துக்களையும், அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர். 10–1–81 அன்று இருதரப்பினரையும், சிதம்பரம் துணை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அழைத்துப் பேசினார். அப்பொழுது குடிசைகளை 11–1–81 அன்று காலை 9 மணிக்குள் அப்புறப்படுத்துவதற்கு ஆதிதிராவிடர்கள் ஒத்துக் கொண்டனர். ஆனால் ஆதிதிராவிடர்கள் ஒத்துக் கொண்டபடி குடிசைகளை அப்புறப்படுத்தாததால், காவல் துறை ஆய்வாளரும் காவல் துறையினரும் குடிசைகளை அப்புறப் படுத்தினர். இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 147, 427, 447 ஆகியவைகளின் கீழ் ஆதிதிராவிடர்கள் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவரவர்களே, நமது முன்னவர் அவர்கள் சொல்லுகிறபோது, ஆதித் திராவிடர்கள் ஒத்துக் கொண்டு பிறகு வெளியேறாமல் இருந்ததற்காக, வெளியேற்றப்பட்டார்கள். என்று சொல்லுகிறார்கள். அப்படி வெளியேற்றப்பட்டவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அதே நேரத்தில் யார்மீது இந்த வழக்கு போடப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நிரந்தரமாக குடியிருக்கும் இடம் அல்ல. களத்து மேட்டில் திடீரென்று குடிசைகள் போட்டு குடியேறிவிட்டார்கள். அந்தக் களத்து மேட்டை உபயோகப் படுத்துபவர்கள் தாங்களாகவே மேல் அதிகாரிகளை அணுகி, ஆதிதிராவிட மக்களை களத்து மேட்டிலிருந்து வெளியேற்றும்படி கேட்டுக்கொண்டார்கள். அதிகாரிகளும் அவர்களை சும்மா அதட்டி களத்துமேடுகளில் இப்படியெல்லாம் குடிசைகளைத் திடீரென்று போடக்கூடாது என்று சொல்வதற்கு ஒப்புக் கொண்டார்கள். அப்படி திடீரென்று அங்கே குடிசைகளை ஏன் போட்டார்கள் என்று பார்க்கிறபோது சிலபேருக்கு குடியிருப்பு வீடுகளை பட்டா செய்து கொடுப்பதாக சொல்லப்பட்டவை. இன்னும் கொடுக்கப் பெறவில்லை என்ற காரணத்தால் அதில் சிலபேருக்கு கொடுத்து விட்டார்கள். சிலபேருக்கு கொடுக்கவில்லை. சிலபேருக்கு சொந்த குடியிருப்புகளும் இருக்கின்றன. ஆக அதிகாரிகளின்

1981 ஏப்ரல் 22]

கவனத்தைத் திருப்ப வேண்டும் என்ற ஒரு போராட்ட முயற்சியாகத்தான் இப்படி களத்து மேட்டில் திடீர் குடிசைகளை எழுப்பி இருப்பதாகத் தெரிந்தது. அப்படி களத்து மேட்டில் குடிசைகளைப் போட்டால், அதிகாரிகள் பட்டாக்களை விரைவில் கொடுப்பார்கள் என்று எதிர் பார்த்து போட்டிருக்கிறார்கள்.

அப்படி அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கும் வேலைகளை எல்லாம் தனியாக வட்டாட்சித் தலைவர்கள், மேற்கொண்டு அதற்கான முறையான முயற்சிகளில் ஈடுபடுவார்கள். களத்து மேடுகளில் திடீர் குடிசைகள் கட்டுவது என்பதெல்லாம் சட்டத்திற்கு முரணான முறைகள் என்பதற்காகத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவே தவிர வேறு எந்த முறையிலும் அல்ல.

உலக வங்கியிடமிருந்து பெற்ற கடன்.

*வினா எண். 834—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கியிடமிருந்து பெருகின்ற கடன் தொகைக்கு எவ்வளவு வட்டி செலுத்தப்படுகிறது?

(ஆ) உலக வங்கி தள்ளுபடி செய்துள்ள கடன் தொகை ஏதும் உள்ளதா?

(இ) ஆமெனில் அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) உலக வங்கி நிதியுதவியுடன் செயல் படுத்தப்படுகின்ற திட்டங்களுக்கு, உலக வங்கியிடமிருந்து நேரடியாக உதவி பெறப்படுவதில்லை. மாநில அரசுக்கு கடன் வடிவிலும், மானிய வடிவிலும் மத்திய அரசின் கூடுதல் உதவியாக உலக வங்கியின் நிதி உதவி வழங்கப் படுகிறது. கடன் பகுதிக்கு மாநில அரசு $5\frac{1}{2}$ சதவீதம் வட்டி செலுத்துகிறது.

(ஆ) இல்லை.

(இ) இவ் வினா எழாது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படி மத்திய அரசு மூலம் உலக வங்கி கொடுத்து, நாம் பெற்ற தொகை எவ்வளவு என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டம், ஒன்று. பெரியார், வைகை பாசனத் திட்டம், இரண்டு